1992 செப்டம்பர் 23]

சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த ஒருவழிச் சாலைகளை இன்றைக்கும் தரம் உள்ள சாலைகளாக மாற்றியதற்குப் பின்னாலே இந்தச் சாலையை மேம்படுத்துகின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 52, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

52—

இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைத்தல்.

* 10018— திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 9156 ஏக்கர் பயன்படக்கூடிய 28.7 கோடியில் அனுமதிக்கப்பட்டுள்ள வைப்பாற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்கால்வாயினால் நம்பிபுரம் பகுதியிலுள்ள 1000 ஏக்கர் நிலமும் பயன்பெறும் வகையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தை நம்பி வானம் பார்த்த பூமியைக் கொண்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்று இல்லாமல் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு 7 கிலோ மீட்டர் கால்வாய் அமைத்தால் கீழ்

[1992 செப்டம்பர் 23]

நம்பியாபுரம், மேல் நம்பியாபுரம், பொன்னையாபுரம், முடித் தலை, நாருகாபுரம், இனாம் அருணாசலபுரம், ஐயம்பட்டி போன்ற வறண்ட பகுதியில் உள்ள ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பயன்பெறும். நம்பிபுரத்திற்கு என்று தனியாக அணைக்கட்டு அமைக்கும்போது 1.4 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 70 இலட்சம் செலவிடப் பட வேண்டியுள்ளதால் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு கால்வாய் அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய நீர்த் தேக்கம் என்பது நம்முடைய ஒப்பற்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் 1992–93ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே தான் மிக நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு காமராஜர் மாவட் டத்திலே அந்தத்திட்டம் செயற்படுத்துவதற்கான வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய மதிப் பீடு 28 கோடி ரூபாய். இன்றைக்கு அந்தத் திட்டத்தினால் ஏறத்தாழ 18 கிராமங்களுடைய பாசன வசதி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் முதல் கட்டப் பணிகளுக்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். முதலில் இந்த 18 கிராமங்களும் நீர் வசதி பெற்றதற்குப் பின்னர் தான் நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த துணைக்கால்வாய்த் திட்டம் பரிசீலிக்க முடியும். ஆகவே, மூல திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வரும் காலங்களில் அவர் கேட்கின்ற அந்தத் துணைத் திட்டத்திற்கான வாய்ப்பை இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

குடிநீர் வழங்க நடவடிக்கை.

*9286—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தொகுதியில் பல ஊர்களுக்குக் குடிநீர் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?